# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.16899/F/2024**

திரு அ. கதிர்வேலு -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலர், -- பொது அதிகார அமைப்பு
நல்லூர், கடலூர் மாவட்டம் - 606 302.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 24.09.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 22.10.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 08.11.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 24.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு அ. கதிர்வேலு என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு S. சுவாமிநாதன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலர், நல்லூர், கடலூர் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், fடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பூர் ஊராட்சியில் கடந்த 01.06.2022 முதல் 31.08.2024 வரையில் மேற்கொள்ளப்பட்ட ஊராட்சியின் பணிகள், தீர்மானங்கள், செலவினங்கள், நிதி வரவுகள் உள்ளிட்ட முழு விவரங்கள், நல்லூர்

ஊராட்சி ஒன்றியத்தின் 01.06.2022 முதல் 31.08.2024 வரையில் ஒன்றியக்குழு கூட்டம் எந்தெந்த தேதிகளில் நடைபெற்றது, ஒவ்வொரு ஒன்றியக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள் யார்யார் என்பது பற்றிய விவரம் மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல்கள், வேப்பூர் கூட்ரோடு பகுதி புல எண்.75-ல் குட்டை நீர்நிலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 4 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

*4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.ஆ2/1003/2023 நாள் 22.10.2024 தேதியிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.*

*5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பூர் ஊராட்சியில் கடந்த 01.06.2022 முதல் 31.08.2024 வரையில் மேற்கொள்ளப்பட்ட ஊராட்சியின் பணிகள், தீர்மானங்கள், ஊராட்சியின் வரவு செலவுகள் குறித்த முழு விவரங்கள், நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 01.06.2022 முதல் 31.08.2024 வரையில். ஒன்றியக்குழு கூட்டம் எந்தெந்த தேதிகளில் நடைபெற்றது, ஒவ்வொரு ஒன்றியக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள் யார்யார் என்பது பற்றிய விவரம் மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல்கள், வேப்பூர் கூட்ரோடு பகுதி புல எண்.75-ல் குட்டை நீர்நிலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்கள் ஆகியவற்றை தகவல்களாக வழங்கக் கோரியதாகவும், நாளதுவரையிலும் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.*

*6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவுகள் இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பூர் ஊராட்சியில் கடந்த 01.06.2022 முதல் 31.08.2024 வரையில் மேற்கொள்ளப்பட்ட*

*ஊராட்சியின் பணிகள், தீர்மானங்கள், ஊராட்சியின் வரவு செலவுகள் குறித்த முழு விவரங்கள், நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 01.06.2022 முதல் 31.08.2024 வரையில் ஒன்றியக்குழு கூட்டம் எந்தெந்த தேதிகளில் நடைபெற்றது, ஒவ்வொரு ஒன்றியக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள் யார்யார் என்பது பற்றிய விவரம் மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல்கள், வேப்பூர் கூட்ரோடு பகுதி புல எண்.75-ல் குட்டை நீர்நிலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்கள் உள்ளிட்ட முழு விவரங்களை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.16899/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலர்,
நல்லூர், கடலூர் மாவட்டம் - 606 302.

**<u>வழக்கு எண்.SA.16899/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு அ. கதிர்வேலு, த/பெ. கோ. அப்புதுபிள்ளை,
சந்தோஷ் மண்டபம் அருகில்,
வேப்பூர் (ம) அஞ்சல்,
கடலூர் மாவட்டம் - 606 304.

Copy to: File
SNPS / 02.04.2025